வசந்தா

April 30,14

**மனிதன் கண்ட நீதியும் தெய்வம் வழங்கும் நீதியும்**

நீதி என்பது வாழ்விலும், இயற்கையிலுமில்லை. **இறைவனுக்கு நீதியில்லை, மனிதனுக்குரியது நீதி.** வாழ்வு வளம் பெற செயல்படுகிறது. வாழ்வு சக்தியில் செய்வதை இயற்கை சட்டத்தில் செய்கிறது. இறைவன் இரண்டையும் அனுமதிக்கிறான். இறைவன் தேடுவது நீதி, சட்டமில்லை. **பெருகி வரும் பேரானந்தம்**. இறைவனை பிரம்மம் எனவும் ஆண்டவன் எனவும் அறிவோம். நிரந்தரமான bliss ஆனந்தத்தில் திளைக்கும்.இறைவன் ஆனந்தம் வளரும் ஆனந்தமாகி (static bliss changes into variable delight) அதை எல்லா நிலைகளிலும், எல்லா நேரத்திலும், எல்லா அம்சங்களிலும் - ஜீவன், ஜீவராசி, பொருட்கள், செயல்கள் - ஆனந்தமாக அனுபவிப்பது இறைவனின் இலட்சியம். அதற்காக பிரபஞ்சம், பூவுலகம் என மனம், வாழ்வு, ஜடமாக சிருஷ்டித்து பெரும் ஆனந்தம் மேலும் பெருகும் ஆனந்தமாக அஞ்ஞானத்தை இறைவன் சிருஷ்டித்தான். சிருஷ்டி படிப்படியானது - சத், சித், ஆனந்தம், துரியா, மனம், வாழ்வு, ஜடம். பரிணாமத்தால் ஜடம் உயர்ந்து சத்தாவது ஆனந்தம். அவற்றுள் நிறைந்துள்ள அஞ்ஞானம் ஞானமாவது பெருகி வரும் பேரானந்தம். இறைவன் மனிதனை தன் பிரதிபிம்பமாக சிருஷ்டித்தான். **இறைவன் பெறும் ஆனந்தம் மனிதனுக்கும் உண்டு.**

மனிதன் வாழ்வில் உயர்ந்து முன்னேறுகிறான். குடும்பத்தைக் கட்டிக் காப்பாற்றுகிறான். முன்னேறும் முயற்சிகள் வெற்றி பெறுவதும், தோல்வியுறுவதுமாக மாறிமாறி வருகின்றன. பையனுக்குப் படிப்பு வரவில்லை. பங்காளி என் சொத்தை எடுத்துக் கொண்டான் என்பது போன்ற பிரச்சனைகள் எழுந்தபடியிருக்கின்றன. ஏன் என் பையனுக்குப் படிப்பு வரவில்லை, பங்காளி அநியாயம் செய்கிறான் என்று மனம் குமுறும் பொழுது **எனக்கு நீதி வழங்க வேண்டும் என்று குரல் எழுகிறது**. பையன் வருஷா வருஷம் பாஸானால் 8வது அல்லது BAயுடன் முடிப்பான். தகப்பனார் பையன் படிப்பை கவனிக்க ஆரம்பித்தால் நாட்டிலுள்ள புது நிலையில் பையன் டாக்டராகி, அமெரிக்கா போகலாம் எனப் புரியும். புரிந்ததைச் செயல்படுத்துவது அளவு கடந்த முன்னேற்றம். மனிதனுக்கு அந்த வாய்ப்பை இறைவன் வாழ்வு மூலம் சொல்வதை மனிதன் பையனுக்குப் படிப்பு வரவில்லை என அறிகிறான். **மனம் அமைதியாகி சற்று சிந்தித்தால், சிந்தனை உணர்வானால், உணர்வு உள்ளுணர்வானால்** , சந்தர்ப்பம் ஆண்டவன் நீதியை விளக்கும் வகையில் செய்தி வரும். இவன் போன்ற பையன் பெற்றோர் முயற்சியால் முன்னுக்கு வந்து மேல்படிப்பு படித்த செய்தி காதில் விழும். காதில் விழுவது கருத்தை எட்டினால் படிப்பு என்ற கடமை மேல்படிப்பு என்ற வாய்ப்பாக மனதில் அன்று மாறி, நாளடைவில் தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். பையன் அமெரிக்கப் பட்டம் பெற்று திரும்பிய பின் “படிப்பு வரவில்லை என்று கஷ்டப்பட்ட பொழுது காதில் விழுந்த செய்தி என் பையனின் வாழ்வை அடியோடு மாற்றி விட்டது” என நினைவு வரும். மனிதன் தேடும் நீதி அன்றைய சௌகரியம். ஆண்டவன் நீதி அடுத்த கட்டத்தில் இன்று கற்பனை செய்ய முடியாத வசதியைப் பெறச் செய்யும் வழி எனப் புரியும். சட்டம் ஒன்றே. வாழ்வில் பிரச்சனைகளேயில்லை. வாய்ப்புகள் மட்டும் உள்ளன. சிறிய வாய்ப்புகள் சிறு பிரச்சனைகளாகவும், பெரும் வாய்ப்புகள் கடினமான சிக்கலான பிரச்சனைகளாகவும் வருகின்றன.**மனித முன்னேற்றம் மனித நோக்கத்தால் நிறைவேறுவது**. நோக்கம் இருப்பது போதும் எனில் அதுவே பலிக்கும். முடிந்தவரை முயல்வது சரி என்பது நோக்கமானால், சந்தர்ப்பம் இடம் தரும் அளவு முன்னேறலாம். **அகமும் புறமும் அவனுக்கே உரியது. ஆண்டவன் தருவதை நன்றிப் பெருக்கோடு நல்லுணர்வால் பெறுவது மனிதன் தெய்வமாகும் பாதை என அறியலாம்.**

வசந்தா

32 ஏக்கர் சொத்தில் ⅓ பங்குள்ள பங்காளி 22 ஏக்கர் அவனுடையது என எடுத்துக் கொண்டான். **இது அநீதியில்லையா? இதுவேதான் நியாயமா?** இது அநியாயம். குடும்ப பஞ்சாயத்து, ஊர் பஞ்சாயத்து, கோர்ட்டிற்குப் போய் அதிகமாய் அவன் பெற்றுக் கொண்ட நிலத்தை மீட்க எல்லா முயற்சியையும் எடுக்க வேண்டும். **ஆனால் அவன் செய்வது தவறு என மனம் நினைக்கக் கூடாது.** ஊர், உலக சட்டப்படி பங்காளி தவறு செய்கிறான். அதை அந்த சட்டப்படி மீண்டும் பெற உரிய முயற்சியை நேரத்தில்,முறையாக எடுப்பது சரி. அவசியம். ஆனால் மனம் நம் முயற்சியே சரி, முடிவு என நம்புதல் ஆண்டவன் அளிக்கும் நீதிக்கு சரியில்லை. "ஆண்டவன் நியாயம் எது எனத் தெரியவில்லை. நான் என் கடமையைச் செய்கிறேன்" என்று நம்பி செயல்பட்டவருக்கு 22 ஏக்கருமே சட்டப்படி, நியாயப்படி, ஊரும், உலகமும் ஏற்று, பங்காளியே முன்வந்து தரும் நிலை ஏற்பட்டுவிட்டது. எதிர்பார்த்தது எனக்குரியது மட்டும். என் நம்பிக்கை சட்டத்திலோ, ஊரிலோ, என் முயற்சியிலோ இல்லை. ஆண்டவன் நீதியிலிருந்தது. முடிவு வந்த பிறகும் என்ன நடந்தது எப்படி நடந்தது, ஏன் நடந்தது இது என்ன நியாயம் என எனக்குப் புரியவில்லை என அன்பர் கூறியது பல முறை நடந்தவை. இது போன்ற பல்வேறு விஷயங்களைக் கண்டு அதன் அம்சங்கள் - காலம், பங்கு, சட்டம், கொடுத்தவர், பெற்ற வழி, மனநிலை - எல்லாம் ஒவ்வொன்றாய்ப் புரிந்தபின் **எல்லா அம்சங்களின் முறைகளை முழுமையாகப் பின்பற்றினால் 3 ½ வருஷ கேஸ் 3 வாரத்தில் முடியும்** . இதற்கு மூல காரணம் வாழ்வில் உண்டு. அதன் பின்னர் நம் சுபாவத்தில் அக்காரணம் தெரியும். சுபாவத்தால் அக்காரணங்களைப் புரிந்து கொண்டால், புரிந்து கொண்டதை தத்துவார்த்தமாகத் தெளிவு பெற்றால் பிரச்சனை வராது. பிரச்சனை வாய்ப்பாகும். வாய்ப்பு பெரிய வாய்ப்பாகும். சொத்தில் எழும் வாய்ப்பு மாறி, உயர்ந்து பதவியாகும். MLA ஒருவர் எலக்ஷனுக்கு நின்றவர் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சந்தர்ப்பவசத்தால் பங்காளியைச் சுபாவத்தில் புரிந்து கொண்ட அன்பருக்கு அந்த இடம் வரும். இதுபோல் MLA ஆனவர் 2 பீரியடிருந்து, அதன்பின் அவர் தம்பி மகன் 2 பீரியடிருந்தார். இவை தற்செயலாக நடந்தவையல்ல. **திருவுள்ளத்தால் பூர்த்தி பெற்றது** . ஆந்திராவில் MP சீட் கிடைக்காதவர் ஒரிஸ்ஸாவில் சீட் கிடைத்து மத்திய மந்திரியானார். முதலில் சீட்டை மறுத்த தலைவர் அநீதியிழைக்கிறார் என்பது மனித நீதி. அவருடைய அநீதி மூலம் ஆண்டவன் **வழங்கும் தெய்வ நீதி பூர்த்தியாகிறது** . பெண் பெற்ற பெரிய பட்டம் அந்த நாளில் அவளுக்குத் திருமண வாய்ப்பைக் கெடுக்கிறது என்றால் அது உலகம் வழங்குவது. அது உயர்ந்ததற்கு அடிப்படை எனப் புரிந்த பின் மாநிலத்திலேயே முதன்மையான குடும்பங்களிலிருந்து பெரும் பட்டம் பெற்ற வரன்களை அனுப்புவது இறைவன்.

அநீதியை 'உயர்ந்த தெய்வ நீதி'யாக<br>
அறியும் உள்ளம் ஆண்டவன் உறையும் இடம்.

உடல் நலம், பிரமோஷன், பண வருமானம், வீடு கட்டுவது, நட்பில் நாணயம், கொடுத்த கடன் வசூலாவது, ஆப்பரேஷன் தடம் மாறுவது, வேலை கிடைப்பது, தலைக்கு மேல் வந்த பிரச்சனை, கணவன் கைவிட்ட மனைவி, கணவனை நிராகரித்த பெண்ணை நினைத்து ஏங்கும் புருஷன், தேர்தலில் தோல்வி, 10,000 ரூபாய்க்கு வாங்கிய மனையை 3 லட்சத்திற்கு விற்கப் போய் 6 இலட்சம் பெற்ற நிகழ்ச்சி போன்றவற்றை எடுத்து ஆராய்ந்தால் அநீதியின் நீதி விளங்கும்.

மனிதன் கண்ணுக்குத் தெரிந்ததை அனுபவிப்பதை மகத்தான வெற்றியாகக் கொண்டு அதை அதிகமாகப் பெற உயிரை விடுகிறான். அவன் வியாபாரியானால் மார்க்கட் என்ன தர முன்வருகிறது எனக் கவனிக்க மாட்டான். கல்லூரி ஆசிரியரானால் கல்வித்துறை அவன் கண்ணுக்குத் தெரியாது, பிரமோஷன் தெரியும். பாடகரானால் அத்துறை அளிக்க

வசந்தா

முன்வருவதை அறிய முன்வருபவர்களில்லை. அந்த மாதம் எத்தனை கச்சேரி செய்யலாம் என்பதே நினைவு. வியாபாரிக்கு மார்க்கட்டும், வேலை செய்பவர்கட்கு அவரவர் துறையும் அளிக்க முன்வருவதையுமறியாத மக்கள் ஆண்டவன் நீதியைப் பற்றி நினைப்பதில்லை. பாடகருக்கு பாரத ரத்னம் காத்திருப்பது தெரியாது. கச்சேரி வசூல் மனதிலிருக்கும். நடிகருக்கு நாட்டுத் தலைமையின் குரல் கேட்காது. அடுத்த படம் முக்கியமாகும். அம்பானி, MS சுப்புலட்சுமி, குரியன், ஸ்டீவ் ஜாப்ஸ், பில்கேட்ஸ், டென்டுல்கர் பெற்றது அவரவர் துறை மூலம் பெற்றது. அதையும் கடந்தது ஆண்டவன் தரும் நீதி. அது வரும்பொழுது கடுமையான சூழலுடன் வரும். அது நமக்குப் புரியாது. அன்னையின் சைத்தியக் கல்வியிலுள்ள 10 சட்டங்களில் ஒன்று 'நேற்றை விட இன்று சற்று முன்னேற வேண்டும்' என்பது. அந்த நோக்கம் உள்ளவர்க்கு ஆண்டவன் தரும் நீதி புரியும். அதை முன் கூட்டி அறிபவருக்கு முன்னேற்றம் எந்த வயதிலும் தொடரும்.

மனிதன் தேடுவது அவன் அறிவுக்கும் அனுபவத்திற்கும் உட்பட்டது. சிறியது. எந்த ஆபிசரும், குமாஸ்தாவும் அடுத்த பதவி வேண்டும் என்றே முயல்வாரே தவிர இலாக்கா தலைமைப் பதவி, மந்திரி பதவி, அகில இந்தியப் புகழ் வேண்டும் என நினைப்பதில்லை. நினைத்தால் அதைப் பேராசை என்போம். காண்டேகர் கதைகளை மராட்டியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் அங்கு வேலை செய்த குமாஸ்தா. இன்று ஞான பீட பரிசு பெற்றவர் நெடுநாள் அச்சாபீசில் கம்பாசிட்டாராக இருந்தவர். 158 பள்ளி, கல்லூரிக்கு முதலாளி 26 ஆண்டு முன் ரைஸ் மில்லில் வேலை செய்தவர். **இவற்றை உலகம் அதிர்ஷ்டம் என்று அறியும். உழைப்பு என விவரிக்கும்.**

ஆண்டவன் இவர்கட்கு மட்டும் இந்த அதிர்ஷ்டத்தைத் தரவில்லை. அனைவருக்கும் ஆண்டவன் தருவது இதுவே. பெற்றவர் சிலர். அச்சிலரில் பெரும்பாலோர் புரியாமல், தலைவிதியேயென தாழ்ந்து பெற்று உயர்ந்தவர். ஒரு சிலரே வாய்ப்பை அறிந்து போற்றி ஏற்றவர். அனைவருக்கும் ஆண்டவன் கொடுத்தார் என்பது நம்ப முடியவில்லையெனில், **அமெரிக்காவைப் பார்த்தால் உடனே அதன் உண்மை புரியும்**. நம் நாட்டில் வாழ்வு தரும் வாய்ப்பை கோடியில் ஒருவர் பெற்றால், அமெரிக்காவில் அதே வாய்ப்பை அனைவரும் ஏற்பதால் அது கோடீஸ்வர நாடாக இருக்கிறது.

கார் வந்த புதிதில், சுமார் 100 ஆண்டு வரை பணக்காரர்கள் மட்டும் கார் வைத்திருந்தனர். இன்று நிலைமை மாறியது. மனிதன் பிறந்த பொழுது அவன் விலங்கிலிருந்து பிறந்தான். விலங்கினம் முழுவதும் மனிதர்களாகவில்லை. சத்திய ஜீவன் பிறந்தால் அதே போல் மனித குலம் முழுவதும் மாறாது என்று 1920இல் கூறிய பகவான் **1947இல் பரிணாமம் பரிணாம வளர்ச்சி பெறுகிறது என்றார்**. ரேடியோ, கார், போன் சிலருக்கு மட்டுமிருந்த காலம் மாறி அனைவருக்குமாகி விட்டது போல் சத்திய ஜீவியம் வரும்பொழுது ஒரு சிலருக்கு மட்டுமல்ல, அனைவருக்குமாகும் என்ற கருத்துப்படி பகவான் எழுதுகிறார்.

நாம் செயல்படுவதெல்லாம் நம் செயலல்ல. **அவை ஆண்டவன் செயல் என்பதை கடவுளை நம்புவோர் எல்லாம் ஏற்கும் கருத்து**. அதை முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள், நாம் நம்புகிறோம். ஆனால் எப்படி என நாம் அறிவதில்லை. அதையே தத்துவ ரீதியாகக் கூறினால் "நம் செயலனைத்தும் இயற்கையின் செயல் எனலாம்" என்று கூறுகிறார்கள். ஆண்டவனைக் கடந்து இயற்கைக்கு வந்தது போல் இயற்கையை வாழ்வு என்பதால் Life-Response என்ற சட்டத்தை நம்மால் ஏற்க முடிகிறது. நான் ஒருவருடன் போனில் பேசினாலும், பஸ் ஏறி சென்னைக்குப் போனாலும் அவை என் செயலல்ல, அவை சமூகம் என்னில் செயல்படுவது என்பது எவருக்கும் தெளிவான செய்தி. பகவான் Spirit ஆத்மா என்பதை பரம்பரை விளக்கத்தை மாற்றி, எங்கும் நிறை பரம்பொருள்

எனக் கூறுகிறார். **நாம் நம்மையும், நாம் முனைந்து ஆசைப்பட்டு செய்யும் செயல்களையும் நம் செயலாகக் காண்கிறோம். அதன் விளைவு உலகப் போர், பொருளாதார நெருக்கடி, பூகம்பம், புயல், இந்திய ஏழ்மை** . பகவான் உலகப் போரை ஆண்டவன் செயல் என்றும், உலகம் முன்னேறத் தடையாக உள்ள மன நிலைகளையும், செயல்களையும், கட்டுப் பெட்டியான இருண்ட மனப்பான்மைகளையும் உடைத்தெறிய இறைவன் மேற்கொண்டது என்கிறார். அதை 1900க்குப் பின் உலகம் இன்றுவரை பார்க்கிறது. சோவியத் யூனியனிருந்தால் அதன் இரகசிய திட்டங்கள் காரணமாக www எழுந்திருக்க முடியாது. Web எழுந்தபின் அத்தடைகள் நிலைக்கா. உலகில் ஆத்மா (Spirit) அக்ஷர பிரம்மத்தைக் கண்டது. **மனம் என்ற கருவி செயல்பட்டு எட்டிய உயர்வு அது** . அதற்கடுத்த நிலையில் ஜீவனுள்ள முழுபிரம்மத்தை மனம் காண முடியாது. அதற்குரிய கருவியாக சத்திய ஜீவியம் பிறக்க வேண்டும். அதை இந்தியா சாதிக்க தன் அரசுரிமை, செல்வம், சத்தியம், நேர்மை, மானம், மரியாதை ஆகியவற்றை இழந்து அடுத்த உயர்ந்த கட்டத்தில் பெற வேண்டும். அதற்கு முதற் படியாக இந்தியா சுதந்திரம் பெற வேண்டும். **பழைய பரம்பரையில் வந்த ஆயுதம் தாங்கிய போர் அந்த அளவில் தேவையில்லை. ஆனால் அம்முறையை இந்தியா பரிணாமச் சட்டமாக ஏற்க வேண்டும் என்பது பகவான் கொள்கை**. பாரதமாக அதை அறிந்தால், பசுமைப் புரட்சியில் வாழ்ந்த விவசாயி உலக உணவுப் பிரச்சனையைத் தீர்த்தது போல், உலகப் பிரச்சனைகளான - பொருளாதார நெருக்கடி, வேலையில்லா திண்டாட்டம் சூழல் பாதிப்பு, அணு ஆயுத சேகரிப்பு, ஏழ்மை - அனைத்தையும் க்ஷணத்தில் தீர்க்கலாம் என்பது பகவான் கொள்கையிலிருந்து நாம் புரிந்து கொள்வது. மனிதன் சந்திக்கும் பிரச்சனைகள் அவனுக்கு அநீதியாகும். அவை ஆண்டவன் வழங்கும் "உயர்ந்த நீதி" என நாம் உணர்வது அவசியம். பாக்கிஸ்தான் பிரிந்தது, நாட்டின் லஞ்ச ஊழல், இந்து-முஸ்லிம் பிரிவினை, பருவ மழை சரிவரப் பெய்யாதது, கல்லூரிகளில் மாணவர் கல்வித் தரம் படு மோசமானது ஒரு புறமிருந்தாலும், போக்குவரத்து, கோடிக்கணக்கான செல்போன், விதவைக்கான பென்ஷன், மக்களுக்கு உடல்நல இன்சூரன்ஸ், கடைத்தெரு வியாபாரம் ஆயிரம் மடங்கு பெருகியது, ரேடியோ, T.V, சமூக முன்னேற்றமான இலக்கியம், பெண் சுதந்திரம், அளவில் பெருகும் கல்வி போன்றவையும் அவற்றிற்கு சிகரமாக 1947இல் 30ஆக இருந்த ஆயுள் பலம் இன்று 60தைக் கடந்ததும், **ஆண்டவன் நீதி அதுவே செயல்படுவதை அனைவரும் காண உதவுகிறது.** சுயநலம் பரநலமானால், லஞ்சம் நேர்மையானால், ஒரு இழை அடிப்படையில்மனம் இருளிலிருந்து ஒளிக்குத் தாவினால் இந்தியா உலகத் தலைமையை அரசியலிலும் ஆன்மீகத்திலும் பெறும். One Man's Perfection can still save the world. ஒருவர் எய்திய ஆன்மீக சிறப்பு ஒரு நாட்டின் முழு செல்வ வளமாகும் என நாம் உணர்வதைக் காட்டும்.

கடன் பாரம் கடலென விரிந்து கண்ணில் விரல் விட்டுக் குடைகிறது என்பது ஒரு அன்பர் நிலை. **உலகத்து செல்வமனைத்திற்கும் உரிமை யாரும் பெறும் நேரம் வந்ததை அன்பர் தாங்கொணா துயரமாக உணர்கிறார்** . வீடு கட்டுவது, கார் வாங்குவது, லாரி போக்குவரத்து, வசதியற்றவர் மேற் படிப்பு,**எதுவுமற்ற ஏழைகள் எல்லாம் செய்து ஏராளமாக சம்பாதிப்பது**இன்று நாட்டை சுபீட்சமாக்குகிறது. அவ்வளவும் கடனை அழித்தால் அழிந்து விடும் என அறிய நேரமாகாது. ஏழைகட்கு அதுவும் பெண்கட்கு அவர் நாணயத்தை மட்டும் நம்பி 20,000ரூ கடன் பாங்கு கொடுத்ததால் micro credit இன்று உலக ஸ்தாபனமாகி , நாடு சுபீட்சம் பெற்று, செய்தவருக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்துள்ளது. **மொழியென ஒன்று 10000 அல்லது 20000 ஆண்டிற்கு முன் உற்பத்தியாகியில்லாவிட்டால் இன்று உலகம் ஊமையாக, உளறுவாயனாக இருக்கும்** .மொழி வளம் மன வளம். கடன் மனிதனை சுயநலத்திலிருந்து பரநலத்திற்குப் போகச் செய்த முதல் வாயில். கடன் ஏற்பட்டதால் சாப்பிடப் பயிரிட்டவன், முடிந்த அளவுக்கு உற்பத்தி செய்து, மார்க்கட்டில் அதை விற்று, பணமாக மாற்றி, சமூகத்தில் வாழ்வில் தவறியவன் பிழைக்க வழி செய்தது. இன்று

வசந்தா

அபரிமிதமான கடன் பெற்றுத் திணருபவர் 10 ஆண்டிற்குமுன் இதில் 10இல் ஒரு பங்கும் கடன் பெற முடியாதவர். மேலும், சில ஆண்டுகட்கு முன் அவரால் கடனே வாங்கியிருக்க முடியாது. **உயிரை எடுக்கும் கடனின் பாசிட்டிவ் பக்கத்தைக் கவனித்தால் கொஞ்ச நாள் - 15 அல்லது 17 வருஷம் முன் - முன்னால் கடனே வாங்க முடியாதவர்** ஏராளமான கடன் பெரும் அளவுக்கு நாடும் அவர் வாழ்வும் விரிந்திருப்பதை அறியவில்லை. இது வாழ்வின் சட்டம் பணத்தில் பாசிட்டிவாக கோடீஸ்வரர் உற்பத்தியாக்கும் மார்க்கெட்டாகவும், நெகட்டிவாக பணவீக்கம் இலட்சம் பர்சென்ட்டாகும் நிலையை உற்பத்தி செய்வதாகவும் மாறுகிறது. மாஸ்கோவில் கொர்பஷாவ் தலைமையில் நாம் நடத்திய பொருளாதார மகாநாட்டில் Drag என்ற பொருளாதார நிபுணர் இதைப் பேசினார். தன சொந்த நாட்டில் அவரை ஜனாதிபதியாக்க முடிவு செய்தபின் ரிசர்வ் பேங்க் கவர்னராக்கினர். இலட்சம் பர்சென்ட் பண வீக்கம் இக்கொள்கையால் 1% ஆக ஒரு வாரத்தில் மாறியது. இது 1992இல் கடன் உயிரை எடுப்பதாக அறியும் அன்பர் கடன் பாரத்தை பாரமாகக் கருதாமல் **நாட்டின் பெரு வளத்தையும் தன் சொந்த திறமை - பணம் ஈட்டும் திறமையும் ஆயிரம் மடங்கு உயர்ந்ததை அறிந்தால்**இன்று அவர் எவ்வளவு கடன் பெற்றாரோ அதே அளவு செல்வத்தை அதே காலத்தில் அவரால் ஈட்ட முடியும் என அவர் காண்பார். 24 மணி நேரமும் பாரியாளுடன் பேச போதவில்லை, அன்யோன்யமான மனைவியின் அன்புப் பேச்சை இழக்க வைத்ததால் அவர் தம்பி, மனைவியை பார்த்துக் கொண்டேயிருக்கிறார் என எழுதிய தேவன் இந்த உண்மையை உள்ளத்தின் பெருமிதத்தில் கண்டவர். **அடுத்த கட்டமும் உண்டு**. அவளை நினைத்த பின் அவனியில் நினைக்கவே ஒன்றுமில்லை என்பவர் அவளில் தன்னையே இழந்து நிற்பார். அவர் வேலைகள் தானே அபரிமிதமாகப் பூர்த்தி செய்து கொள்ளும். ஏனெனில் உலகில் பிறந்த மொழி பேச்சாயிற்று. மார்க்கட் உற்பத்தி செய்த மனம் மக்கட் செல்வமாகியது. **மனம் மனத்தின் தூய்மையில் நிலைத்து ஆத்மாவை அடைந்த ஆத்ம ஞானம் உலகில் ஆன்மிக வளமாகும்** . இது பகவானுடைய கொள்கை. “பொற்பாதங்களையும் காணப் பெற்றால், மனிதப் பிறவியும் வேண்டுவனே இம்மாநிலத்தில்” என்பது நாயனார் உணர்ந்த ஆன்மிக உன்னதம். பெண்ணின் அன்பையும், மார்க்கட்டில் செல்வத்தையும், பொது வாழ்வில் (Power) அதிகாரத்தையும் பொங்கி வரும் புளகாங்கிதமாக நெஞ்சம் சிருஷ்டிக்கிறது. **அதுவே தெய்வம் வழங்கும் நீதி**

இவற்றையெல்லாம் நேரடியாகவும் விளக்கமாகவும் கூறிய பகவான் **சொல்லாமல் சொல்லியவை சூட்சுமமான பெரும் நீதிகள்.** அவற்றுள் ஒன்று

நல்லது, தெய்வ நீதி, என்பதால் அதிகமாகக் கேட்கக் கூடாது.

எந்த செயலுக்கும் மூலத்தில் அனந்தம் உண்டு. பக்திக்கு அனந்தமுண்டு. பக்தி மேலிட்டால் நெஞ்சு செயலற்று லயத்தில் திளைக்கும். தெய்வ நீதி உயர்ந்தது எனில் அதை அதிகமாகப் பெற ஆசைப்பட்டால், பலன் ஆசைக்கே எழும். தெய்வ பக்திக்கு வராது. ஆசை அனந்தமானால் தெய்வ நீதி வேறொரு வாயிலாக மனித நீதியாகி அநீதியாகும். நம்மால் சமாளிக்க முடியாது. பகவான் ‘வருவதை ஏற்பது சரி, அத்துடன் நிற்பதே முறை. ஆசையை ஆண்டவன் பேராலும் கிளறக் கூடாது’ என்கிறார். அஞ்ஞானம் மனிதனுக்கு பிரச்சனை. மனிதன் அனந்தத்தைப் பெருகிவரும் பேரானந்தமாக அனுபவிக்க இறைவன் முனைந்து ஞானத்திற்கு வரையறை ஏற்படுத்தியதால் அஞ்ஞானம் ஏற்பட்டது என்பது பூரண யோகம். அஞ்ஞானத்தை அஞ்ஞானமாக அறிந்தால் அவதிப்படும் மனிதன் தான் ஆழ்ந்த மனத்தில் ஆனந்தம் அனுபவிப்பதை அறியவில்லை. அஞ்ஞானம் தானே விரும்பி ஏற்படுத்தியது. என் மேல் திணிக்கப்பட்டதில்லை என்ற தெளிவு ஆத்ம விழிப்பு. விழிப்பு ஆத்மாவில் ஏற்பட்ட பின் அஞ்ஞானம் ஆனந்தம் தரும் அவசியமில்லை. மனிதன் அஞ்ஞானத்தைக் கடந்து ஞானத்தை அடையலாம். அதன்பின் வாழ்வும், செயலும்

பரிணாமமும் விரிவாகி யுகம் க்ஷணமாகும், பிரச்சனை வாய்ப்பாகும். நோய் உடல் நலமாகும். சோகம் ஆனந்தமாகும். கடன் சொத்தாகும்.

அதுவே தெய்வம் அமுல் படுத்தும் நியாயம்

**கூட்டம் கட்டுப்பாட்டை இழந்து நாலுபக்கமும் வேகமாகக் கலைவது (stampede) களேபரமாகும்.** ஆயிரக்கணக்கானவர் அடிபடுவர். நூற்றுக்கணக்கானவர் உயிரிழப்பர். பின்னல் கோலாட்டம் போல் கலையும் கூட்டம் கட்டுப்பாடுடன் கலைந்தால் களேபரம் கனத்து குதூகலமாகும். ஒவ்வொருவரும் ஓடி விளையாடுவது ஒழுங்கு முறையுள் வருவதால் இன்பம் பேரின்பமாகும். ஆனந்தம் பேரானந்தமாகும். உள்ளூர் டென்னிஸ் கோர்ட் விம்பிள்டன் விளையாட்டாக மாறும் வினோதம் எழும். Romance Eternal என்ற site திருமண வாழ்வு எப்படி படிப்படியாக உயர முடியும் என்ற சட்டங்களைக் கூறுகிறது. The Life Divine எப்படி அகந்தையும், ஆசையும் ஆத்மாவாகவும் பிரபஞ்ச ஆத்மாவான ஈஸ்வரனாகவும் மாறி சிருஷ்டியில் ஆனந்தம் வளர்கிறது எனக் கூறுகிறது. அதனால் The Life Divineயை பிரபஞ்ச ஜாதகம் என்று நான் பெயரிட்டு அழைப்பதுண்டு.

**அநியாயம் ஆண்டவன் நியாயம்**

என்ற சொல் நான் பகவான் எழுதியவற்றை ஏராளமான அன்பர்கள் வாழ்வைக் கண்டு அறிந்த முடிவு. கிருஸ்துவ மதம் தவறு செய்பவனை மன்னிக்க வேண்டும் எனக் கூறுகிறது. எது தவறு, யார் தவறு செய்கிறார்கள், யாரை மன்னிப்பது, ஏன் மன்னிப்பது என பகவான் கேள்விகளை எழுப்புகிறார். உலகில் விரயமில்லை என்பதும் எவரும் தவறு செய்யவில்லை என்பதும் திருடனுடைய அடி திருவடி என்பதும் விபசாரியின் கற்பு விலை மதிக்க முடியாதது என்பதும் பகவான் எங்கோ ஓரிடத்தில் போகிற போக்கில் ஊன்றிக் கவனிப்பவர் கண்ணில் மட்டும் படும்படி எழுதுகிறார்.

வாழ்க்கைக்குப் பல சட்டங்களுண்டு. அவை ஊர் உலக சட்டங்களிலிருந்தும், ஆண்டவன் நீதியினின்றும் மாறுபடும். வேலை செய்தால் கூலியுண்டு என்பது ஊர் அறிவது. **உழைப்புக்குரியது ஊதியம். வேலைக்குரியது சாப்பாடு.** ஊர் சட்டம் மாறும் நேரம் உண்டு. உலகம் ஒரு புது உலகத்தை சிருஷ்டி செய்து , வெறுங்கையுடன் வருபவனுக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் பரிசு கொடுக்க முடிவு செய்தால் , **இப்பரிசை பெறுவோருக்குரிய சட்டம்** பரம்பரை பரம்பரையாக உழைத்த பலன் வேறொருவருக்குப் போக வேண்டும். அந்த நேரம் அது பெரிய அநீதி, கொடுமை. ஐரோப்பாவில் பல நூறு ஆண்டுகள் பல தலைமுறைகளாக உழைத்த பலன் அனைத்தையும் முதலாளிக்குக் கொடுத்தவர் இலட்சக்கணக்கானவர்கள். 1500 A.D-யில் அமெரிக்காவைக் கண்டனர். ஐரோப்பாவில் அனாதைகளாக இருந்தபெரும்பாலோர் வீடு, மனைகளை விற்று கப்பலேறி வனாந்திரமான புது உலகம் அடைந்தனர். பட்டது பாரதம். உயிரிழந்தவர் அநேகர். அடிபட்டவர் ஆயிரம். தப்பிப் பிழைத்தவர்முன் 1000ஏக்கர் ஆயிரமாயிரமாக விரிந்தது. **எவரும், எதையும் எந்த அளவிலும் எடுத்துக் கொள்ளலாம்.** விபரம் தெரிந்து ஐரோப்பாவிலிருந்து நூற்றுக்கணக்காக வந்தவர் ஆயிரக்கணக்காக வந்தனர். இனாமாக ஆயிரமாயிரம் ஏக்கர் நிலம் பயிரிட்டு உரிமை கொண்டாடினர். 100 ஆண்டிற்குப்பின் நிலம் லிமிட் செய்யப்பட்டு ஒரு சதுரமைல் - 640 ஏக்கர் - ஒருவருக்குஇனாமாக வழங்கினர். நாளாவட்டத்தில் ½ சதுரமைல் - 320 ஏக்கர் - ¼ சதுரமைல் 160 ஏக்கர் வழங்கினர். அடுத்த நூற்றாண்டில் இனாமாக நிலம் ஒருவருக்கு 100 ஏக்கர் , ஒரு வேலையாளுக்கு 50 ஏக்கர் என வழங்கினர். **அவர்கள் பெரும் நிலம் உடையவரானார்கள்.** சம்பாதிப்பது முழுவதும் சம்பாதித்தவருக்கே. எவருக்கும் எள்ளளவும் தர வேண்டியதில்லை. சர்க்கார் இல்லை. அதனால் வரியில்லை. சுதந்திரம் சுதந்திரமாக வளர்ந்தது. பயிரிட்டுப் பெற்றதை அனுபவிக்க முழு சுதந்திரம். மகசூலை விற்க நிர்ப்பந்தமில்லை. சுதந்திரமாக எவரும், எங்கும், எதையும் விற்கலாம். **உழைப்பின் பலன்**

**உழைத்தவருக்கு மட்டும் உண்டு.** எதிரி என்று ஒருவரில்லை. எதிர்ப்பை உடையவனே துப்பாக்கி கொண்டு சமாளிக்க வேண்டும். உற்பத்திக்கு உரிமையுண்டு. விற்பதற்கு உரிமையுண்டு. காப்பதற்கு உரிமையுண்டு. பலர் வந்து தாக்கினால் அவர்களைச் சுட்டு வீழ்த்துவது சட்டம். குற்றமில்லை, அரசியல் என்பது அவரவர் இஷ்டப்படி வாழ்வது. **வாழும் சுதந்திரம், பொருளாதார சுதந்திரமாகவும் அரசியல் சுதந்திரமாகவும் உருவாயின.**

அவர்கள் இன்று 8000 அல்லது 80000 ஏக்கர் நிலம் பெற்றுள்ளனர். அவர்கள் பிள்ளைகள் செனட் மெம்பர், கல்லூரிப் பேராசிரியர், கம்பெனி முதலாளியென வாழ்கின்றனர். புது உலகம் என்று அமெரிக்கா ஏற்பட்டு 30 கோடி மக்கள் அபரிமிதமான செல்வமும், அளவு கடந்த அறிவும் பெற்று, சந்திர மண்டலம் போகவும், Internet கண்டுபிடிக்கவும், ஆண்டுதோறும் கோடீஸ்வரர் எண்ணிக்கை வளரவும் வேண்டுமானால், பல தலைமுறைகளில் சம்பாத்தியம் முழுவதும் முதலாளி அனுபவிக்க வேண்டும் என்பது **வாழ்வின் சட்டம்.** பல மாதம், சில வருஷமாகியும் காலை முதல் மாலைவரை வேலை செய்தாலும் பட்டினியாக அரைவயிறு ஒரு வேளை சாப்பிடுவது தலைவிதி, கொடுமை. **குணமாகாத வியாதி தானே குணமாகவும், ஜாதகத்திலில்லாத அதிர்ஷ்டம் உற்பத்தியாகவும், எந்த வேலையும் செய்யப் பிரியப்பட்டாலும், இல்லாமலிருப்பதும் வாழ்வில் சந்தோஷமாக அபரிமிதமாக உற்பத்தியாக வாழ்வு ஏற்படுத்திய சட்டம், ஆன்மீக உலக அமைப்பு என நமக்கும் புரியாது.** புரிந்தால் ஏற்க முடியாது. ஏற்றுப் பலன் பெற்றால் அதனால் மட்டும் குறை கூறுவதை, வாய் ஓயாமல் பேசுவதை நிறுத்த முடியாது. ஆண்டவன் நம்மை மீறி, நம் தான்தோன்றித்தனத்தை மீறி செயல்பட்டே நமக்கு 'நீதி' வழங்க வேண்டும்.

சிறுவனுக்குப் படிப்பு வரவில்லை, பள்ளியில் கேலி, வீட்டில் தண்டனை. வசதியான குடும்பம். தகப்பனாருக்கு பையன் மீது வெறுப்பு ஏற்பட்டு ஒரு ஹாஸ்டலில் சேர்க்கிறார். அவன் மற்றவர் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொள்ள யோசனை செய்கிறான். அந்த நேரம் வந்த ஒரு புது ஆசிரியர் பையனுக்கு எழுத்து தலை கீழே தெரிவதால் படிப்பு வரவில்லை எனக் கண்டு, பெற்றோரிடம் கூறினார். பெற்றோருக்கு வெறுப்பு வெறுப்பாகவே இருந்தது. **லியனார்டோ, எடிசன், ஐன்ஸ்டீன் போன்ற மேதைகட்கு இருந்த குணம் அது.** அது குறையில்லை. லியனார்டோ ஸ்ரீ அரவிந்தரின் முற்பிறப்பு. ஐன்ஸ்டீன் மேதை. எடிசன் டெக்னாலஜியின் மேதை என்றால், இதுவரை சிறுவன் பட்ட கஷ்டம் கொடுமையா? அநீதியா? **மேதாவிலாசம் பையன் பிறந்த சூழ்நிலையில் கொடுமைக்கு வித்தாயிற்று.** கொடுமையின் காரணமாக சிறுவன் பெற்ற தீவிரம் சோகம். சோகம் தீவிரம் அடைந்ததால், தீவிரம் செறிவு பெற்றது. செறிவு பெற்றது, சோகத்தின் காலம் முடிவடைந்ததைக் குறிக்கிறது. மேதாவிலாசம் பையனுக்குக் கொடுமையைக் கொடுப்பது மேதாவிலாசம் வெளிவரும் வாழ்க்கைப் பாதை.

வாழ்வு முழுவதும் ஆண்டவன் நியாயம்.
மனத்தின் இருள் அதை அநியாயமாகக் காண்கிறது.

உலகில் நீதி, நியாயம், நல்லது மறுக்கப்படும் இடங்கள், மனித உறவு, பெற்றோர் குழந்தைகள், கணவன் மனைவி, மாமியார் மருமகள், தலைவன் தொண்டர், ஆள்பவர் ஆளப்படுபவர், இவை கணக்கிலடங்கா. ஒரு 10 ஆண்டு அல்லது வாழ்நாள் முழுவதும் ஒருவரைக் கவனித்தால் அவர் பிற்காலத்தில் பெற்றதை **வாழ்வின் சந்தர்ப்பம் கட்டாயமாகக் கொடுத்ததை நாம் அநீதியாக அறிவது தெரியும்.** பகவான் குறிப்பாகச் சொல்லியது இந்திய அடிமை வாழ்வு. அதே தத்துவத்தை அறிவு, செல்வம், செல்வாக்கு, ஞானம் போன்ற இதர இடங்களில் கண்டால்,

இன்றைய நம் அடிமை வாழ்வு நாளைய உலக சுதந்திரம்
**இன்று ஒருவர் ஏற்கும் அறியாமை நாளை உலகம் பெரும் மேதாவிலாசம்**

வசந்தா

இன்றைய ஏழ்மை நாளைய குபேர சொத்து.

இக்கருத்து ஓரளவு விளங்கினால், அதை பலமுறை பல இடங்களில் பல்வேறு வகையாகக் காண்பது தெளிவு வளர உதவும். சரித்திரம், பெரியோர் வரலாறு, நாமறிந்தோர் வாழ்வு முக்கியமாக

நம் சொந்த வாழ்வின் உள்ளுணர்வு

இக்கருத்தை விளக்கும். இதற்கும் விலக்குண்டு. விதியின் விலக்கு விதியின் மூலத்தை ஆழ்ந்து அகன்று பரந்து விரியுமாறு விளக்குவது **மூலத்தின் விதி**. ஒரு சட்டம் தெளிவு பெற அதை ஆழ்ந்து அறிய வேண்டும். சட்டம் மூலமாக மனத்தில் ஆன்ம விளக்கமாக மலர **ஒரு சட்டம் மூலம் மற்ற சட்டங்களை, - எல்லா சட்டங்களையும் - அறிய முயல வேண்டும்.**'இருநீர் வியனுலகம் இனிய சொல்லாலன்றி மாறாது' என்று புலவர் கூறியது வாழ்வின் அனுபவம் அடியோடு மறுப்பது. அடம் பிடிக்கும் குழந்தை, அழிச்சாட்டம் செய்யும் ஆண், சண்டிகேசியான பெண், ஊரை அழிக்க முயலும் நாட்டாண்மைக்காரன் எனப் பலருண்டு. அவர்களிடம் இன்சொல் பலன் தராது. **வன்சொல் அவர்களை அவர்கள் போக்கில் வலுப்படுத்தும்.** மனித நீதியும், ஊர் நீதியும் தவறும் நிலையில் உலக நீதி செயல்படும். நாம் அதை மௌன சக்தி Silent Will என அறிவோம்.

**சொல் மௌனமாகி, மௌனம் வலிமையானால், வலிமையான மௌனத்தின் சொல் இனிமையாக வந்தால் அழிச்சாட்டம், ஆர்ப்பாட்டம், சண்டி அக்கிரமம் அநியாயம் அதேநிலையில் திருவுருமாறி**

**ஆண்டவன் நியாயம் மனிதனுக்கு அருளாகும்.**

வாழ்க்கை வழங்கும் பரிசுகளை எதிராகவோ, மறைமுகமாகவோ, மாற்றமாகவோ தருவது வழக்கம். பார்ட்னர் திட்டத்தைக் கொடுத்தவர் இனி தேவையில்லை என்பதால் அவரை நீக்க முயன்றார். **அவர் அன்பர்.** பணம் முதலீடு செய்தவர் கஷ்ட கூட்டாளியை நீக்க முயன்றார். **தன்னை திட்டத்திலிருந்து விலக்கிக் கொள்ளச் செய்யும் முயற்சி என அன்பருக்கு முதலில் அது தெரியவில்லை.** முடிவிலேயே அது விளங்கியது. முடிவில் புரிந்தது முதலிலேயே புரிந்து அன்பர் சந்தோஷப்பட்டிருந்தால், 10 ஆண்டு பட்ட சிரமம், கோர்ட், கேஸ், மனத்தாங்கல், மகசூல் நஷ்டம் இருந்திருக்காது. மனிதன் எதிர்பார்ப்பது வேறு. தெய்வநீதி வேறு. தெய்வம் நியாயத்தை மட்டும் வழங்கும். **மனிதன் உள்ள மனநிலைக்கேற்ப அது வரும்.** மாமியார் மருமகளைப் பட்டினி போடுகிறாள். கொடுமைபடுத்துகிறாள், சிறுமைப்படுத்துகிறாள். அதில் திருப்தியடைகிறாள். மருமகள் சொல்லொணா துன்பம் அனுபவிக்கிறார். மருமகள் அன்பரில்லை. கொடுமை கொடுமையாகிறது. பிறகு மருமகள் அன்பராகிறார். நிலைமை மாறுகிறது. மாமியார் மறுத்தவை அனைத்தும் மருமகளுக்குக் கிடைக்கிறது. **அவை அளவில் அபரிமிதமாகவும், தரத்தில் உயர்ந்தும், உரிமையில் உன்னதமாகவும் வருகின்றன.** கணவனுக்கு என்ன சம்பளம் எனவும் தெரியாத மனைவி, பணத்தைக் கையால் தொட்டுப் பார்த்ததில்லை. தேவைப்பட்ட பொருட்களை வாங்கும் பொருளாதார வசதியில்லை. மனைவி அடக்கமானவள். கேட்டறியாதவள். கணவனே நிலைமையை அறிந்து பொருட்களை வாங்கினாலொழிய எதற்கும் வழியில்லை. மனைவி அன்பரானாள். வசதி பெருகியது. **பெருகிய வசதி அன்பருக்கு வந்தது.** கணவனுக்கு என்ன வசதி எப்படி வருகிறது, எனவும் தெரியாது. மனைவிக்குரிய நியாயமான பங்கை கணவன் மறுக்கும் பொழுது, அன்னையின் அருள் வருமுன் கணவன் தன்னைத்தானே விலக்கிக் கொள்வதை அறியவில்லை. மனைவிக்கும் அது தெரியவில்லை.

நியாயமும், நீதியும் ஏராளமாக உண்டு.
**அவை நம் சிற்றறிவுக்கு எட்டுவதில்லை.**

சர்வதேச ஸ்தாபனத் தலைவர், மெம்பர் ஒருவருக்கு வேலை கொடுத்தார். கொடுத்த வேலையைச் சிறப்பாக மெம்பர் செய்தார். அவருக்குத் திருப்தி. அனைவரும் பாராட்டினர். தலைவருக்குக் கோபம் வந்தது. 'உன்னை யார் செய்யச் சொன்னது என்றார். ' உங்கள் உத்தரவின் பேரில்தான் செய்தேன் ' என பதில் வந்தது. தலைவர் வசைமாறி பொழிந்தார். **பிரச்சினையே இல்லாத பொழுது கோர்ட்டில் கேஸ் போட்டார்**. கேஸ் இருமுறை தோற்றது. இராஜினாமா செய்தார். அவர் வீண் செலவு செய்த அவ்வளவு பணமும் நன்கொடையாக வேறொருவர் கொடுத்தார். அவதூறுக்கு ஆளான மெம்பரை அனைவரும் பாராட்டினர். CEO-வாக நியமித்தனர். ஸ்தாபனம் 3 ஆண்டில் பிரபலமாயிற்று. தண்டனை அனுபவித்த மெம்பருக்கு முடிவில் புரிந்தது. "தலைவர் தன்னை முழுவதும் விலக்கிக் கொள்ளும்படி இதுவரை நடந்திருக்கிறார் " என்று விளங்கியது. தலைவர் ஆண்டவன் நியாயத்தை அவர் பாணியில் நிறைவேற்றியுள்ளார். **எவரை நாம் உடனடியாக விலக்க வேண்டுமோ அவரை விலக்காவிட்டால், அவரே முன்வந்து விலக முடிவு செய்த பொழுது நம்மை விலக்க முயல்வார்** என்பது வாழ்வு செயல்படும் வகை. அதிர்ஷ்டம் பலருக்குத் தேவையில்லை. சிலருக்கு கசப்பு, வேப்பம்காய். அடுத்தவரோ, தகப்பனாரோ, நண்பரோ அதிர்ஷ்டத்தை அழைத்து வந்தால் அவர்மீது கோபப்பட்டு அவரை விட்டகல்வது, **தரித்திரம் அதிர்ஷ்டத்தை விலக்குவது.** கொடுப்பது அன்பராகவோ, அன்னையாகவோ இருக்கலாம். அன்பருக்கு வாழ்வு அன்னையை அருகில் அழைத்து வாழ்வின் இருளை விலக்கும் செயல் அது என்று ஆரம்பத்தில் புரியாது. முடிவில் பலருக்குப் புரியும். முடிவிலும் புரியாதவருண்டு.

உலகில் விரயமில்லை, வலி, துன்பம், நோய், மரணம் மனிதனுடைய குறுகிய பார்வைக்குரியன என்றால் அதே கோணத்தில் நாம் வாழ்வின் நிகழ்ச்சிகளைக் காண்பது அறிவுடைமை. **கணவன் பெரிய வருமானமுள்ள வியாபாரத்தை திவாலாக்கியபின் இதர சொத்துக்களையும் அழித்தார்.** என் குடும்பம் ஆத்மாவில் மலர அவை தேவையென என்னால் இன்றும் ஏற்க முடியவில்லை. அன்று எப்படி அது விளங்க முடியும்? **அவர் செய்தவற்றை குதூகலமாக நான் வரவேற்றிருக்க வேண்டும் என்பது ஆண்டவன் நியாயம்.** நன்றி கெட்ட செயலை நாள்தோறும் நண்பன் தவறாமல் செய்த பொழுது மனம் மகிழ வேண்டும் என்பது சட்டமானால், இன்றும் அந்த சட்டம் எனக்குத் தேவையில்லை என்றே மனம் அலறுகிறது. பெரும்பலன் - அவர் வாழ்வில் அறியாதது, அவர் உலகில் ஒரு முறையும் எழாத பலன் - பெற்றவர் "உன்னால்தான் எனக்குக் கஷ்டம் " என நேரடியாகக் கூறுவது வாழ்வு. நல்லது வந்தவுடன் கொடுத்தவருக்கு தாமதமின்றி கெடுதல் செய்யத் துடிப்பவரைக் கண்டு மனம் குதூகலம் பெற வேண்டும் என்பது ஆண்டவன் நியாயமானாலும், அந்த பொறுமை எனக்கின்றில்லை என்பதுடன், **இனியும் அது வேண்டாம் என்றே என் மனம் அடித்துக் கூறுகிறது.** 1947-இல் ஒரு கோடி பேர் இடம் பெயர்ந்து, அல்லலுற்று, அவதிப்பட்டு நாடு அவமானம் அடைந்திராவிட்டால், வந்த சுதந்திரம் வந்த வழியே போயிருக்கும் என யாரிடம் கூற முடியும்? **இறைவன் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றிய முறையென இன்று ஏற்க முடியுமா?** லஞ்சம், ஊழல், B.A, M.A பட்டம் பெற்று தமிழோ, ஆங்கிலமோ எழுத முடியாத படிப்பு, இளைஞர்கள் அமெரிக்கப் பாதையில் செல்லும் அலங்கோலம் எல்லாம் நாடு முன்னேறும் பாதை என எப்படி ஏற்பது? வயிற்றைக் கீறி கட்டியை எடுக்கும் டாக்டருக்கு பீஸும், நன்றியும் கூறலாம். நம் கண் எதிரே 5 வயது மகனை பட்டினி போடும் நாத்தனாருக்கு நன்றி கூற முடியுமா? தன் வாழ்வின் அவல ருசிகளை அனுபவிக்கும் தகப்பனார் பெண்கள் திருமணத்தைக் கருதாமல், என்னாவது என யாராவது கேட்டால், 'தலைவிதி ' என்றால் எப்படி மனம் பொறுக்கும்? அமெரிக்காவில் Ph.D. பட்டம் பெற்று வேலையிலிருக்கும் பெரும் செல்வந்தர் மகனுக்குப்

வசந்தா

பெண் தர மறுக்கும் தகப்பனார் கூறுவது "என் பெண்ணை வெளி நாட்டிற்கு அனுப்ப முடியாது." அவர் தன் மகன் வெளிநாடு போவதற்கு சம்மதப்பட்டார்.

இந்த நியாயம் யாருக்கு வேண்டும் என்பதே
எல்லோரும் எழுப்பும் குரல்.

யாருக்கு வேண்டுமோ, வேண்டாமோ, **அதுதான் நடக்கும்** . தவிர்க்க முடியாது எனத் தெரிந்தாலும் ஏற்க முடியாது என்பதே மனநிலை.

ஆள்வது ஆனந்தம். **ஆளப்படுவது பேரானந்தம்.**

என்பதை அறிந்தவர் அதன்படி செயல்பட்டால் பேரானந்தம் பெரும்பேராகும். இவற்றை ஆதிநாள் தொட்டு உலகமறியும். **உலகம் அறிந்ததை உள்ளம் அறியும் நேரம் உயர்ந்த நேரம்.** 1946-இல் தமிழ் நாட்டுக் காங்கிரஸில் 4 அணா உறுப்பினராக இராஜாஜியை சேர்க்க மறுத்தது. 1952-இல் அவருக்கு முதன் மந்திரி பதவிக்கு அழைப்பு என அழைத்தவரோ, அழைக்கப்பட்டவரோ அறிய முடியாது. பெரும் அறிஞர் மூதறிஞரானாலும், எட்டாத ஞானம் அது. **நாளை அது சிறுவனும் அறிந்து ஏற்கும் மனப்பான்மையாகும்.** அம்மனப்பான்மை நாம் அதிர்ஷ்டம் என அறிவதை அன்று வரம் பிரவாகமாகப் புரளும் பேரதிர்ஷ்டத்தின்முன் தரித்திரமாகத் தோன்றும். க்ஷணம் கூட இம்மனநிலையை மனமோ, அறிவோ இன்று ஏற்கும் நிலை நமக்கில்லை. அதிர்ஷ்டம் க்ஷணம் வரும். மணிக்கொருமுறை அந்த க்ஷணம் மாறிமாறி வரும். அதிர்ஷ்டம் என்பதை செல்வம் என அறிவோம். **செல்வாக்கு செல்வத்தைக் கடந்தது.** செல்வாக்கைக் கடந்ததுண்டா? வாக்கு உள்ளே போய் செல்வாக்கு 'உள்வாக்கா'னால், அது உலகில் நாம் பெறும் செல்வாக்காகும்.

ஹிட்லர் போர் தொடுத்த பொழுது அமெரிக்க உதவியை ஐரோப்பியர் நாடினர். **"இது ஐரோப்பியருடைய உள்நாட்டுப் பிரச்சினை. ஏன் அமெரிக்கா அங்கு வர வேண்டும் " என்று** அமெரிக்கர் மறுத்தனர். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மட்டும் உதவ ஆசைப்பட்டு பல வகைகளில் போரில் பங்கு கொண்டார். முடிவான ஒரு ஜெர்மன் போர் கப்பல் அமெரிக்க வியாபர கப்பலை தாக்கியதை ஒரு சாக்காகக் கொண்டு போரில் இறங்கினார். நாட்டு மக்களுக்கு அபிப்பிராயமில்லை. 1943-வரை ஐரோப்பாவில் நடக்கும் யுத்தங்களில் அமெரிக்கர் கலந்து கொள்வதை அந்நாட்டு மக்கள் வெறுத்தனர். அப்பொழுது USA இராணுவம் 16000 பேர் கொண்டது. மிகச் சிறிய இராணுவம். இராணுவத்தில் சேனாதிபதிக்கு மட்டும் காரிருந்தது. சொந்த வியாபாரம், ஏற்றுமதி, உற்பத்தி, செல்வம், கல்வி, பல்கலைக்கழகம், ஆராய்ச்சி போன்றதே அமெரிக்கர் விரும்பியது. **போர் அவர்கள் விரும்பியதில்லை. அதுவும் அவர்களுடன் சம்பந்தப்படாத போரில் அவர்கட்கு அக்கரையில்லை.** இன்று கடந்த 60 ஆண்டாக அமெரிக்கா உலக வல்லரசாக, இராணுவ அதிகாரியாக, பொருளாதாரத் தலைமை பெற்று உலகை commerical domination, cultural domination வியாபாரத்திலும், கலாச்சாரத்திலும் ஆள்வது அன்று அமெரிக்கர் ஏற்காத ஒன்று.

ஒரு பிலிம் புரொடியுசர் கருணாநிதியுடன் சண்டை போட்டுக் கொண்டார். ஓராண்டிற்குப்பின் கருணாநிதி மந்திரியாகி விட்டார். "இவர் மந்திரியாவார் எனத் தெரிந்திருந்தால் நான் சண்டை போட்டிருக்க மாட்டேன் " என்றார். வாழ்க்கை பின்னால் வருவதை மாற்றியும், தலைகீழேயும் காட்டும். நம் பள்ளியில் முதல் 5 வகுப்புக்கு, இடத்திற்குப் போட்டி. 5 முதல் 11 வகுப்பில் மாணவர் குறைவு. State Board, CBSE, ISE என்று பல பாட திட்டங்களிருப்பதால் பெற்றோர் பிள்ளைகளை மெடிகல், என்ஜீனியரிங் சேர்க்க மார்க் வேண்டும். Primrose-இல் படிப்பு முக்கியம், மார்க்கில்லை. அதனால் சில மாணவர்களை, கடந்த 2 அல்லது 3 ஆண்டுகளாக வேறு பள்ளிகட்கு மாற்றினர். பிள்ளைகள்

மனப்பாடம் செய்து மார்க் வாங்கினாலும் மெடிகல் சீட் கிடைக்காது. மனப்பாடம் செய்து மார்க் வாங்கி Anna University -இல் இடம் கிடைத்து படிக்க முடியாமல் மாணவர்கள் திணறுகிறார்கள். முடியாமல் வந்துவிடுகிறார்கள். இந்த ஆண்டு நம் பள்ளி மாணவன் மனப்பாடம் செய்யாமல் State-இல் முதலிடம் பெற்றவுடன் மேல் வகுப்புகளில் சேர போட்டி எழுகிறது.

கண்ணுக்குத் தெரிவது உண்மை, பெரியது
என்பது மனித நிலை. அதுவே நீதி, நியாயமாகும்.
நீதியும், நியாயமும் நமக்குத் தெரிந்த வழியாக
மட்டும் வருவதில்லை. தெரியாத வழியாக அதிகமாக வரும்.

மேலும் சிறியது தவறினால், பெரியது வரும் என்பது ஒரு சட்டம். உலகம் பெரியது, மிகப் பெரியது என அறிவதும் பெரிய ஆத்மாவுக்குப் பெரியதாகத் தெரியாது. அரசியலில் அதுபோன்ற நோக்கமுடைய தலைவர் உயர்ந்து, எழுந்ததைக் கண்டு உலகம் 1966-இல் வியந்தது.

இருப்பதை விட்டுப் பறப்பதை நாடாதே என்பது மரபின் விவேகம்.
இருப்பதை விட்டாலன்றி பறப்பது கிடைக்காது
என்பது ஸ்ரீ அரவிந்தம்.

‘விடலறிய எம் போல்வார் இதயம் தொழும் ’ ஆண்டவனே முன்வந்து உள்ளதை எடுத்தால் மனிதன் அநீதியைக் காண்கிறான். தேவனுடைய ‘வேதாந்தம் ’ என்ற கதையில் வேதாந்தம் B.A. படித்து முடிக்காமல் 1943-இல் 200/-ரூபாயுடன் சென்னை வந்து அப்பணத்தை இழந்து பெற்று ஒரு சிறிய மனப்பான்மையுள்ள பணக்காரர் வீட்டில் ரூ.30/- சம்பளத்திற்கு வேலை செய்யும் பொழுது 2 போக்கிரிகள் அளவு கடந்த சாமர்த்தியத்துடன் அந்த 200-இல் 180-ஐப் பிடுங்கிக் கொள்கிறார்கள். பணக்காரக் குடும்பம் மட்டமான குடும்பம். அதைவிட்டு வெளியே வராமல் வேதாந்தம் முன்னுக்கு வர முடியாது. 30 ரூ. சம்பாதிப்பவனுக்கு 25,000 ரூ. முதல் கொடுத்து பத்திரிக்கை ஆரம்பிக்கச் சொன்னவர் தம் டாக்டர் பெண்ணையும் கொடுக்க முன்வருகிறார். அவனுக்குப் பத்திரிக்கையில் விருது கிடைக்க இருக்கிறது. பத்திரிக்கை வேலை கொடுக்கவும் நினைக்கிறது. மத்திய மந்திரி தமிழ்நாடு சுற்றுப்பயணத்தில் அவனை உடன் அழைத்துப் போகிறார். பணக்காரக் குடும்பம் அநியாயமாக அவன் மீது திருட்டுப்பட்டம் கட்டியதால் அதைவிட்டு வெளியேறுகிறான். வந்த அத்தனை அதிர்ஷ்டங்களும் “தரித்திரத்தை ”- பணக்கார குடும்ப வேலையை - விட்ட பிறகே வருகிறது. அவனே விடமறுக்கும் தரித்திரம் தானே முன்வந்து விலகியது ஆண்டவன் நீதி. அன்று அவனுக்கு அநீதியாகத் தோன்றியது.

நாட்டுக்கு நாடு பண்பு கலாச்சாரம் மாறுகிறது. நம்மூரில் கோவிலுள் செருப்பு போட்டுக் கொண்டு போக எவரும் நினைக்க முடியாது. செருப்பில்லாமல் வருவது இங்கிலாந்தில் அநாகரீகம். ஒரு வீட்டினுள் ஆண்கள் நுழைந்தால், உட்கார்ந்துள்ள பெண்கள் எழுந்து நிற்பது மரியாதை. இங்கிலாந்தில் உள்ளே வரும் பெண்ணை மரியாதையாக வரவேற்க ஆண்கள் எழுந்து நிற்பார்கள். எச்சில், தீட்டு என்பதை அறியாத நாகரீகம் உண்டு. நமக்கு அவை முக்கியம். முதலாளியை வேலைக்காரர் அமெரிக்காவில் பேரிட்டு அழைப்பார்கள். நாகரீகம், நாட்டு வழக்கம், பண்பு, மாறுவதால் ஒரு நாட்டுப் பழக்கம் அடுத்த நாட்டில் வேறு உணர்ச்சிகளை எழுப்பும். பண்பு மாறினால், “நியாயம் ” ‘அநியாயமாக’த் தோன்றும். அதில் விஷயமில்லை, நியாயம், நீதி, பழக்கம், வழக்கம் ஆகியவற்றைப் பாகுபாடு செய்தறிவது அவசியம்.

தோட்டத்தில் ஒரு கட்டடம் எழுப்புமுன் அங்கொரு மரமிருந்தால் வெட்டி அப்புறப்படுத்துகிறோம். நம் மரபில் பச்சை மரமானால், அதுவும் சீசனில் பூத்துக் குலுங்கும்

பொழுது வெட்டமாட்டார்கள். தென்னை மரத்தை எவரும் வெட்டத் தயங்குவார்கள். வெட்டுவது அவசியமானால், ஒரு தென்னம்பிள்ளையை வேறொரு இடத்தில் நட்டபின், மரத்தை வெட்டுவார்கள். அமெரிக்காவில் அப்படி ஒரு எண்ணம் தோன்றாது. பழக்கம் என்பதும் அதற்குரிய உண்மையும் வேறு. ஆரோவில் ஆலமரம் கோடாரியை குத்தி வைத்ததால் வேதனைப்பட்டு, அன்னையிடம் முறையிட்டது. சாப்பாட்டு அறை மாமரம் பட்டுப்போனதால் வெட்ட முடிவு செய்த செய்தியை மரம் அன்னையிடம் கூறி புது வாழ்வு பெற்றது. **மரத்திற்கு உயிர் உண்டு. அதை அறியாமல் ஏராளமான மரங்களை வெட்டி அப்புறப்படுத்தினால் அந்த நிலம் கொடுக்கக் கூடிய பெரும் வருமானம் இல்லாமல் போகும் என்பதும் உண்மை.** ஆனால் அறிவில்லாமல் செய்யும் காரியம் அறியாமைக்குரிய பலனை - தண்டனை - பெறும் என்பது உண்மை. மரம் அவசியம் வெட்ட வேண்டிய சந்தர்ப்பம் எழுந்தால் என்ன செய்வது?**நல்லது, கெட்டது, பாவம், புண்ணியம் என்பது மனத்திற்குரியது. மனிதனுக்குரியதல்ல.** தாழ்ந்தவன் தவறு செய்தால் தண்டனை பெறமாட்டான். அதே தவற்றை உயர்ந்தவன் செய்தால் தண்டனை வரும் என்பது உலகறிந்த உண்மை. ஜட்ஜ் கொலையாளியைத் தூக்கில் போடுவதால் சட்டப்படி குற்றமாகாது. அது அவருக்குப் பாவமுமில்லை. **புண்ணியமாகவும் இருக்கும்.** நாம் வாங்கிய மனையில் பல மரங்கள் இருப்பதால் அவற்றை வெட்டி அகற்றி வீடு கட்ட வேண்டும் என்றால் அன்பர் செய்யக் கூடியதென்ன? மனை வாங்கும்முன் யோசிக்க வேண்டிய விஷயம் இது. **சமர்ப்பணம் என்பதை அன்பர் பின்பற்றுபவரானால், சமர்ப்பணம் அவருக்கு தவறாது வழி காட்டும்.** மரம் வெட்டுவது அவர் வாழ்வையோ, ஆத்மாவையோ பாதிக்காது என்றால் சமர்ப்பணம் வழிவிடும். சமர்ப்பணம் தடையானால் அவர் அம்மனையை வாங்கக் கூடாது. தர்மசங்கடமான நிலை வாழ்வில் அரிபொருளாக வரும். சமர்ப்பணத்தை ஏற்ற அன்பருக்கு தர்மம் சங்கடமாகாது. **தர்மம் சங்கடமானால் சமர்ப்பணம் மேலெழுந்தவாரியாக உள்ளது எனப் பொருள்.**

சமர்ப்பணம் தர்ம சங்கடமான நிலையை அழகாக அகற்றுவதைக் காண்பது அற்புதம். சமர்ப்பணம் ஆழ்ந்து ஆத்ம ஜீவனோடிருந்தால், தர்ம சங்கடம் **தலைகீழே மாறி தலை காக்கும் தர்மமாகும்.** பார்ட்னர் தவறு செய்து தண்டனை பெறுவது நியாயமானாலும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. செய்வது கொட்டம் அடித்தல் பாவம் என்பது தர்ம சங்கடமான சூழ்நிலை ஏற்கவும் முடியாது. மறுக்கவும் முடியாது என்ற சந்தர்ப்பம் உண்டு. சில பரீட்சைகள் 3 முறை மட்டும் எழுத அனுமதியுண்டு என்றால், மூன்றாம் முறை எழுதுபவன் எடுக்கக் கூடிய எச்சரிக்கையை எடுக்காமல் எதிரானதைச் செய்தால், அவன் செயலின் பொறுப்பு அன்பருடையது எனில் அது சங்கடமான நிலை. ஒரு சந்தர்ப்பத்தில் எந்த வழியாகவும் போக முடியாது எனில் இரண்டு எதிரெதிரான வழிகட்கும் உயர்ந்த வழியொன்றுண்டு. அதை மனம் அறியாது. சமர்ப்பணம் அறியும். அதை சத்திய ஜீவியம் செய்யும்.

**எவ்வழியும் தவறான நேரம், நேர்வழி எழுவது**
**அன்னைக்குச் செய்யும் சமர்ப்பணம்.**

-----

**மூலம் : ஸ்ரீ கர்மயோகி**
**சொற்பொழிவாற்றியவர் : திருமதி. வசந்தா லட்சுமிநாராயணன்**
**சொற்பொழிவாற்றிய தேதி : 24.11.14**